உ
சிவமயம்



"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
# வவுனியா.

புகையிரத நிலைய வீதி, வவுனியா.

| | |
|---|---|
| ஆரம்பம் : **1952** | பதிவு இல : **HA / 4 / V / 5** |

: vaymha@gmail.com    : YMHA vavuniya

# கணக்காய்வு அறிக்கையும்
# ஆண்டறிக்கையும்

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை

உ
சிவமயம்



"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
# வவுனியா.


புகையிரத நிலைய வீதி, வவுனியா.

| | |
|---|---|
| ஆரம்பம் : **1952** | பதிவு இல : **HA / 4 / V / 5** |

www.vavuniyaymha.org

: vaymha@gmail.com : YMHA vavuniya


# கணக்காய்வு அறிக்கையும் ஆண்டறிக்கையும்

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை

உ
சிவமயம்

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கீதம்

**(பல்லவி)**

வவுனியா நகரினில் வளர்ந்ததோர் நிறுவனம்
வாழிய வாழியவே
வளம்பெறுஞ் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
வாழிய வாழியவே

(வவுனியா)

**(அனுபல்லவி)**

அவனியில் புகழுடன் அருமைகள் பலவுடன்
வாழிய வாழியவே
ஆண்டுகள் பலப்பல அருந்தொண்டு ஆற்றியே
வாழிய வாழியவே

(வவுனியா)

**(சரணம்)**

இந்து சமயத் தொண்டும் - தமிழ்
இலக்கிய சமூகத் தொண்டும்
வந்த துயர் துடைக்கும் - பல
வகைகளில் தொண்டுஞ் செய்து

அற நெறிப் பாட சாலை - சிறுவர்
ஆரம் பப் பாட சாலை
அருள் நெறிப் பிரசங் கங்கள் - நல்ல
ஆத்மீக வழிகாட் டல்கள்

தங்கும் இட வசதி - பெரும்
தர்ம நிதி உதவி
எங்கும் புகழ் விளங்க - நல்ல
ஏற்ற மொடு செழித்து

(வவுனியா)

***ஆக்கம் : அகளங்கன்***

உ
சிவமயம்

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் – வவுனியா.

## வருடாந்த பொதுச்சபைக்கூட்டம் – 2022

இடம் : சுத்தானந்த இந்து இளைஞர் சங்க நடராசர் மண்டபம்
காலம் : 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி
தலைமை : மருத்துவர். கௌரவ ப.சத்தியநாதன்
(தலைவர் - வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்)

## நிகழ்ச்சி நிரல்

01. இறைவணக்கம்
02. மறைந்த சங்க உறுப்பினர்களுக்கு அஞ்சலி
03. வரவேற்புரையும், தலைமையுரையும் (தலைவர்)
04. சென்ற ஆண்டு வருடாந்தப் பொதுச்சபைக் கூட்ட அறிக்கை வாசித்தல் (செயலாளர்)
05. அறிக்கையில் எழும் விடயங்கள்
06. வருடாந்த செயற்பாட்டு அறிக்கை (செயலாளர்)
07. கணக்காய்வு அறிக்கை (2021 ஆம் வருட அறிக்கை) சமர்ப்பித்தல் (பொருளாளர்)
08. ஆலோசனைகள்
09. புதிய உறுப்பினர்களை அங்கீகரித்தல்.
10. வேறு விடயங்கள்
11. ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு
    1) செயலாளர்
    2) தர்மகர்த்தாசபை - 01
    3) ஆட்சிமன்ற உறுப்பினர் - 01
12. நன்றியுரை
13. இறைவணக்கம்
14. மதிய உணவு

தாங்கள் கலாசார உடையுடன் சமூகந்தந்தும், சுகாதார நடைமுறைகளை பின்பற்றியும் ஒத்துழைக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் உண்மையுள்ள
சிவராசா நாகராஜா
கௌரவ செயலாளர்

உ
சிவமயம்

# ஆட்சிமன்ற உறுப்பினர்கள்.
## 11.04.2021 தொடக்கம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | மருத்துவர்.ப.சத்தியநாதன் |
| செயலாளர் | - | திரு.சிவராசா நாகராஜா. |
| பொருளாளர் | - | திரு.த.யசோதரன். |
| துணைத் தலைவர்கள் | | திரு.பா.சுந்தரராஜன். சமா.நீ |
| | | திரு.தே.அமலன் |
| | | திரு.கோ.சிறீஸ்கந்தராஜா |
| | | திரு.நா.தியாகராசா சமா.நீ. |
| துணைச் செயலாளர் | - | திரு.சி.ரவீந்திரன் |
| துணைப் பொருளாளர் | - | திரு.க.சுவர்ணராஜா |
| ஆட்சிமன்ற உறுப்பினர்கள் | | |
| | | திரு.க.சத்தியசீலன் சமா.நீ |
| | | திரு.த.பிரதாபன் சமா.நீ |
| | | திரு.தி.க.இராஜலிங்கம் சமா.நீ |
| | | திரு.இ.கோகுலன் |
| | | திரு.ப.விமலநாதன் |
| | | திரு.த.பிரபாகரன் |
| | | திரு.சி.கௌரிபாலன் சமா.நீ |
| | | திரு.மாணிக்கம் ஜெகன் சமா.நீ |
| | | திரு.செ.இ.அமிர்தலிங்கம் |
| காப்பாளர்கள் | - | வைத்தியகலாநிதி சி.சுதாகரன் |
| | | திரு.சி.சுப்பிரமணியம் சமா.நீ |
| தர்மகர்த்தா சபை | - | திரு.வை.செ.தேவராசா சமா.நீ. |
| | | திரு.க.ந.பாலச்சந்திரன் சமா.நீ |
| | | திரு.க.ஜயம்பிள்ளை சமா.நீ |
| | | திரு.நா.சேனாதிராசா சமா.நீ |
| | | திரு.க.நவரத்தினம் சமா.நீ |
| எண் பார்வையாளர் | - | திரு.சு.ஜெயச்சந்திரன் |

# பாலர் பாடசாலை ஆசிரியர்கள்

திருமதி.கு.கமலாதேவி - அதிபர் (2021 யூலை வரை)
திருமதி.ச.தர்சினி - அதிபர் (01.08.2021 தொடக்கம்)
திருமதி.ந.சுபாஜினி
திருமதி.நா.அகிலா
திருமதி.தி.பிரியங்கா
செல்வி.தி.நிவேதா
செல்வி.வ.ஹம்சினி

**அலுவலக ஊழியர்கள்**

திரு.சு.கோகுலன் - முகாமையாளர் (ஒக்டோபர் 2021 வரை)
திரு.மு.இராஜகிருஷ்னன் - பணியாளர் (யூலை 2021இல் இருந்து)
திருமதி.P.தம்மிகா - சுகாதார ஊழியர்

**அறநெறி பாடசாலை ஆசிரியருக்கான கொடுப்பனவு பெறுவோர்**

1. திருமதி கு.லோகவல்லி - மகாறம்பைக்குளம் அறநெறிப் பாடசாலை
2. செல்வி வி.பிரசாந்தினி - வீரதுர்க்கை அறநெறிப் பாடசாலை (2021 ஏப்ரல் வரைக்கும்)
3. செல்வி த.ஜீவா - பட்டிக்குடியிருப்பு அறநெறிப் பாடசாலை (2021 ஏப்ரல் வரைக்கும்)

**முன்பள்ளி ஆசிரியருக்கான கொடுப்பனவு பெறுவோர்**

1. திருமதி. ஜீ.பேபி ஷகிலா - மருதங்குளம் முன்பள்ளி (2021 ஏப்ரல் வரைக்கும்)

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் ஆட்சிமன்றக் கூட்டங்களுக்கு சமூகமளித்தோர் விபரம் 11.04.2021 தொடக்கம்

| | | மொத்தம் | வரவு |
|---|---|---|---|
| 01. | மருத்துவர்.ப.சத்தியநாதன் | 07 | 07 |
| 02. | திரு.சிவராசா நாகராசா | 07 | 07 |
| 03. | திரு.த.யசோதரன் | 07 | 07 |
| 04. | திரு.தே.அமலன் | 07 | 06 |
| 05. | திரு.பா.சுந்தரராஜன் சமா.நீ | 07 | 06 |
| 06. | திரு.கோ.சிறீஸ்கந்தராசா | 07 | 06 |
| 07. | திரு.நா.தியாகராசா சமா.நீ | | |
| | (தற்காலிக இடைநிறுத்தம்) | | 01 |
| 08. | திரு.சி.இரவீந்திரன் | 07 | 06 |
| 09. | திரு.க.சுவர்ணராஜா | 07 | 01 |
| 10. | திரு.க.சத்தியசீலன் சமா.நீ | 07 | 05 |
| 11. | திரு.த.பிரதாபன் சமா.நீ | 07 | 05 |
| 12. | திரு.தி.க.இராஜலிங்கம் சமா.நீ | 07 | 07 |
| 13. | திரு.இ.கோகுலன் | 07 | 06 |
| 14. | திரு.ப.விமலநாதன் | 07 | 07 |
| 15. | திரு.நா.வில்வராசா (சுயவிருப்பில் இடைவிலகல்) | | |
| 16. | திரு.த.பிரபாகரன் | 07 | 07 |
| 17. | திரு.சி.கௌரிபாலன் சமா.நீ | 07 | 04 |
| 18. | திரு.மாணிக்கம் ஜெகன் சமா.நீ | 07 | 05 |
| 19. | திரு.செ.இ.அமிர்தலிங்கம் | 07 | 04 |

உ
சிவமயம்

# கௌரவ தலைவர் அறிக்கை

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

அன்பார்ந்த பொதுச் சபை உறுப்பினர்களே, இனிய பணிவான வணக்கம்!

இன்று உங்களைச் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த 11.04.2021 அன்று நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் நீங்கள் என்னைத் தலைவராக தெரிவு செய்தீர்கள் உங்களுக்கு முதலில் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

எமது முன்னோர்களால் நல் நோக்குடன் சமய, சமூக வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லவென இச் சங்கமானது 1952 ஆம் ஆண்டு கவியோகி சுத்தானந்த பாரதியினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு இவ் வருடத்துடன் எழுபது ஆண்டுகள் கடந்துவிட்டது. இக் காலப்பகுதியில் சங்கத்தை வளர்த்த, வழிநடாத்திய எமது சான்றோர்களை பணிந்து தலை வணங்குகிறேன்.

கடந்த பொதுச் சபைக் கூட்டமானது இறைவணக்கத்துடன் அமைதியாக ஆரம்பித்து பின் சிலரது விமர்சனங்கள் கூச்சல் குழப்பங்களும், விரும்பத்தகாத வார்த்தைப் பிரயோகங்களும் எமக்கு மனவேதனையை ஏற்படுத்தியது. இவ் வருட பொதுக் கூட்டத்தினை கௌரவ பொதுச் சபை உறுப்பினர்கள் அமைதியாகவும், நேர ஒழுங்குடனும், ஜனநாயக மரபுகள், பண்பாடுகளுக்கமைவாகவும், யாப்பு விதிகளுக்கமைவாகவும் ஏனைய சங்கங்களுக்கு முன்மாதிரியாகவும் நடாத்த ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்பட்ட விரும்பத்தகாத நடவடிக்கைகளின் பின்னர் சமூக வலைத்தளங்களில் பல காரசாரமான கருத்துப் பரிமாற்றங்கள் சங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடியாறு வெளிவந்தன. இதனால் எமது புதிய ஆட்சிமன்றம் பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கவேண்டி வந்தது. இருந்தும் எம்மை சுதாகரித்துக் கொண்டு நடராஜப் பெருமானின் இறையாசியுடனும், ஆட்சிமன்ற, தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் மற்றும் சமூக, சமய நலன் விரும்பிகளின் ஆலோசனையும் பெற்று, விசேட ஆட்சி மன்ற கூட்டத்தில் ஆட்சி மன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டது. புதிய நிர்வாகம் பொறுப்பேற்ற போது நிதி நிலைமையும் சவாலாக

அமைந்ததுடன் கொரோனா பெரும் தொற்றுக் காரணமாக எமது வருமானப் பகுதிகள் முடங்கின அத்துடன் வங்கியின் புதிய சுற்று நிருபத்திற்கமைவாக வங்கிக் கணக்கை மாற்றுவதிலும் தடங்கல் ஏற்பட்டது. இவற்றையெல்லாம் கடந்து எமது பணிகளை முன்னெடுத்தோம்.

முடக்க நிலை தொடர்ந்த போதும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றியும் வெளியிடப்படும் சுற்று நிருபங்களுக்கமைவாகவும் எமது அன்றாடச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தினோம். நடராசப் பெருமானுக்கு வெள்ளிதோறும் பூசை வழிபாடுகளும், பிரதோச பூசைகளும் தவறாது நடைபெற்றது. திருநாவுக்கரச நாயனாரின் குருபூசை தவிர்ந்த ஏனையவர்களின் குரு பூசைகள் மட்டுப்படுத்தியளவில் நடைபெற்றது. திருவாசக முற்றோதல், விவேகானந்தர் பிறந்த தினம், தைப்பொங்கல், மற்றும் சரஸ்வதி பூசையும் ஏடு தொடக்கலும் வழமை போல் உபயங்களைப் பெற்று நடைபெற்றன.

நாடு முடக்கப்பட்டிருந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு எமது சங்க மண்டபத்தை வ/தமிழ் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க ரொரான்ரோ கிளையினருக்கு வழங்கியிருந்தோம். இதன் மூலம் தொழில் வாய்ப்பு பாதிக்கப்பட்ட 1000 மேற்பட்ட மக்களுக்கான உதவித் திட்டத்தில் நாமும் சிறுபங்களிப்பாக மண்டபத்தையும் எமது உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் சரீர உதவியினை வழங்கியிருந்தோம். இச்செயற்பாடானது பலரது கவனத்தையும் சங்கம் மீது திருப்பியது. இதன் பின்னர் புலம்பெயர் உறவுகள் உட்பட பலர் என்னூடாகவும், உப தலைவர் தே.அமலன், மற்றும் பொருளாளர் த.யசோதரன் ஆகியோருடன் தொடர்பு கொண்டு சங்கத்தினூடாகவும் உலருணவுப் பொதிகளை வழங்க முன்வந்தனர். இவர்கள் மூலம் சுமார் ரூபா 676,000.00 பெறுமதியான 305 பொதிகளை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க முடிந்தது. பங்களிப்பு செய்தோர் விபரம் இணைக்கப்பட்டுள்ளது. இப் பொதிகளை பாதிக்கப்பட்ட இடங்களுக்கு கொண்டு சென்று விநியோகிக்க பொருளாளர் த.யசோதரன் மற்றும் உப தலைவர் தே.அமலன் ஆகியோர் தங்களது வாகனங்களையும் பொதி செய்து விநியோகம் செய்வதில் திரு.த.பிரபாகரன், திரு.மாணிக்கம் ஜெகன் மற்றும் சிவஸ்ரீ கணேசதாச குருக்களும் தமது முழு நேர பங்களிப்பையும் வழங்கியிருந்தனர். அத்துடன் பொருட்களை கொள்வனவு செய்து பொதி செய்து விநியோகம் செய்வதில் இரவு பகல் பாராது தொழிற்பட்ட எமது உறுப்பினர்கள் ஊழியர்கள், திரு.எஸ்.கோகுலன், திரு.க.இராஜகிருஸ்ணன், திரு.எஸ்.விநாயக மூர்த்தி மற்றும் நலன் விரும்பிகளுக்கு இவ்விடத்தில் நன்றி

கூறுவதோடு நடராசரின் ஆசியும் அவர்களுக்கு கிடைக்க வேண்டி நிற்கிறேன்.

இக் காலப்பகுதியில் துறவிகள், சமயப் பெரியார்கள் சங்கத்திற்கு வருகை தந்து எமது பணிகளை பாராட்டியதுடன் எதிர்காலத்தில் எம்முடன் இணைந்து பணியாற்றவும் முன்வந்தனர். சங்கத்தின் வருமானங்களை அதிகரிப்பதற்காக திருமண மண்டபம், சமையலறை மற்றும் தங்குமிடங்களில் காணப்பட்ட சில குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைச் சீர் செய்ததன் மூலம், நாடு கட்டுப்பாடுகளை தளர்த்தும் பொழுது சங்கம் பழைய நிலையை நோக்கி நகரத் தொடங்கியது. தற்போது பலர் விரும்பி எமது திருமண மண்டபம், தங்குமிடங்களை பயன்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் கிடைத்த வருமானங்களிலிருந்து முன்னர் பெற்ற கடன்களை மீளச் செலுத்தவும் முடிந்தது. பொருளாதார ரீதியான முன்னேற்றத்திற்கு பொருளாளரின் அர்ப்பணிப்பும், சிக்கனத்தன்மையும் காரணமாக அமைந்தது. அவரது சேவையினை மனதார வாழ்த்துகின்றேன்.

பாலர் பாடசாலையானது சில காலம் இயங்கவில்லை இக்காலப்பகுதியில் ஆசிரியர்களுக்கு இடர்கால கொடுப்பனவுடன் எமக்குக் கிடைத்த உலருணவுப் பொதிகளை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்திற்கு உதவ முடிந்தது. மீண்டும் இயல்பு நிலை திரும்பியதும் வழமையான கொடுப்பனவுகளை வழங்க முடிந்தது. மாதாந்தம் ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன் பெற்றோருடன் சந்திப்புகளையும் மேற் கொண்டும் பாடசாலையின் செயற்பாடுகளை இலகுவாக்க முடிந்தது. பெற்றாருடனான கலந்துரையாடலில் முன்பள்ளி கல்வி தொடர்பாக திரு.சு.ஜெயச்சந்திரன் (முகாமையாளர், ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், புளியங்குளம்) அவர்களால் கருத்துரை வழங்கப்பட்டது. IMHO- Laanka நிறுவனம் மற்றும் திரு க.சுவர்ணராஜா அவர்களாலும் நடாத்தப்பட்ட ஆசிரியர்களை வலுப்படுத்தும் பயிற்சி நெறிகளில் எமது ஆசிரியர்களும் பங்குபற்றினார்கள். கல்வித் திணைக்களம், ஏனைய அரச நிறுவனங்களுடன் சுமூகமான உறவைப் பேணி எமது சிறுவர் கல்விச் சேவையினை மேலும் வலுப்படுத்தினோம். அத்துடன் ஒரு ஆசிரியருக்கு அரச கொடுப்பனவையும் பெறமுடிந்தது.

அறநெறி கல்வி வளர்ச்சியில் சங்கத்தின் பங்கு குறித்து கலந்துரையாடியதன் பின் அறநெறியாசிரியர்களை ஒன்றிணைத்து அவர்களை வளப்படுத்தி ஊக்கப்படுத்த முயற்சி மேற்கொண்டோம். கலாசார உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப் புடன் அறநெறி ஆசிரியர்களை அழைத்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தினோம். இதன்

போது இவர்களுக்கும் உலருணவுப் பொதிகளை வழங்கியதுடன் சிவஸ்ரீ க.கந்தசாமிகுருக்கள் எம்முடன் இணைந்து இவர்களுக்கு சிறு கொடுப்பனவையும் வழங்கினார். இவர்களுக்கான கருத்துரைகளை திரு.க.சுவர்ணராஜா அவர்கள் தனது பாணியில் வழங்கினார். இதன் பின் பல உதவித்திட்டங்களில் இவர்களை உள்வாங்க முடிந்தது. இச் செயற்பாடானது மேலும் சங்கத்திற்கு நற்பெயரை ஈட்டித்தந்தது.

சங்கத்திற்கு வருகை தந்த இராமகிருஸ்ண மிஷன் சுவாமிகள் எதிர்காலத்தில் சங்கத்துடன் இணைந்து சேவைகளை வழங்க விருப்பம் தெரிவித்ததுடன் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125 வது வருட நிறைவை சங்கத்துடன் இணைந்து வவுனியாவில் நினைவு கூர முன்வந்தனர். இந் நிகழ்வில் அறநெறி பிள்ளைகளுக்கு அப்பியாசப் புத்தகங்களும், வருகை தந்தவர்களுக்கு விவேகானந்தரின் புத்தகங்களும் வழங்கப்பட்டதுடன் மலிவு விலையிலும் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டது. அதன் போது பெருமளவிலான புத்தகங்களை மக்கள் வாங்கிச் சென்றனர். அத்துடன் ரூபா எழுபத்தையாயிரம் பெறுமதியான உலருணவுப் பொதிகளை இருபத்தைந்து குடும்பங்களுக்கு வழங்குவதற்காக நிதியும் வழங்கினர் அத்துடன் ஒரு தொகுதி புத்தகங்களை எமக்கு வழங்கவும் முன்வந்தனர். இவற்றினை பாடசாலை நூலகங்களுக்கு வழங்க தீர்மானித்து அதற்கான வேலைதிட்டங்களில் ஈடுபட்டுள்ளோம்.

எமது மண்டபங்களை பல அறிஞர்கள், எழுத்தாளர்களின் நூல் வெளியீட்டிற்கும், ஏனைய அறிவுசார் நிகழ்விற்கும் வழங்கி அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. நிறுவனங்களின் பயிற்சி நெறிகளுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் மண்டபங்களை நவீன முறையில் ஒழுங்கு செய்து வழங்கியதன் மூலம் அதிக நிகழ்வுகள் இங்கு நடைபெற்றது. வரலாற்று ஆய்வாளர் திரு. திருச்செல்வம் ஐயாவின் மொழி மதம், கலாசாரம் குறித்த கலந்துரையாடலும் இடம்பெற்றது. அத்துடன் சங்கத்தில் சிதம்பரரேஸ்வரா நடனாலயத்தின் கலைப்பயிற்சிகளும் மற்றும் சிவன் மானிட அமையத்தினூடாக இலவசமாக ஆழ்மனத்தியானமும், யோகாசனமும் பயிற்சி நெறியும் நடைபெறுகிறது.

செயற்றிட்டங்கள், புதிய நியமனங்கள் மற்றும் தீர்மானங்கள் அனைத்தும் ஆட்சி மன்றக் கூட்டத்தில் கலந்துரையாடி ஒற்றுமையாகவும் ஜனநாயக ரீதியாகவும் முடிவுகளை எடுக்கும் பண்பாட்டை எமது ஆட்சி மன்றம் முன்னிலைப்படுத்தியது. இக் காலப்பகுதியில் எமக்கு நல் ஆலோசனைகள் வழங்கியும் வழிகாட்டிகளாகவும் செயற்பட்ட பல உறுப்பினர்கள் குறிப்பாக உபதலைவராகவும் தர்மகர்த்தா சபை உறுப்பினராகவும் இருந்து

பல உதவிகளை புரிந்த அமரர் க.ந.பாலச்சந்திரன் அண்ணர், அமரர் C.A.இராமஸ்வாமி ஐயா, சமய குருவாக இருந்த சிவஸ்ரீ கந்தசாமி குருக்கள், அமரர் க.வேல்மாறன் ஆகியோர் எம்மை விட்டு பிரிந்தது எமக்கு பேரிழப்பாகும். அத்துடன் கௌரவ ஆட்சி மன்ற உறுப்பினர் திரு.நா.வில்வராசாவின் சுயவிருப்பிலான இடைவிலகலும் எமக்கு மன வேதனையைச் தந்தது.

பல்வேறு இடர்கள், சவால்களை சந்தித்து சங்கம் தனது குறிக்கோளை நோக்கி பயணிக்கையில், எமது கௌரவ செயலாளர் அரச ஊழியராக கடமைபுரிவதாலோ அல்லது அவரது அக்கறையின்மையினாலோ அவரது கடமைகளில் பல தாமதங்களும் தடங்கல்களும் ஏற்பட்டன. தற்போது ஓரளவிற்கு முன்னேற்றம் இருந்தாலும் அவரது முழுமையான ஒத்துழைப்பு தற்போதும் கிடைக்கவில்லை. செயலாளரது பல பணிகளை கௌரவ பொருளாளரும் உப தலைவர் திரு.தே.அமலன் அவர்களும் பொறுமையுடன் செய்து முடித்து நிர்வாகச் சிக்கலை தீர்க்க உதவினார்கள். செயலாளர் வராத காலங்களில் அவரது அவசர தகவலினை ஏற்று உப செயலாளர் திரு.சி.இரவீந்திரன் அவர்கள் வருகை தந்து ஒத்துழைப்பு வழங்கினார். ஆட்சி மன்ற உறுப்பினர்கள் பூரண ஆதரவு தந்தும் ஆலோசனைகளை வழங்கியும் சங்க செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

இவ்வாறு எமது பணிகள் இறையருளால் செயற்படுத்து வதற்கு பொதுச்சபையினராகிய உங்களதும், உயரிய தர்மகர்த்தா சபை உறுப்பினர்களினதும், காப்பாளர்களினதும் மற்றும் ஆட்சி மன்ற உறுப்பினர்களினதும் ஆலோசனைகளும், ஆசீர்வாதங்களும், ஒத்துழைப்புகளும் எமக்கு கிடைத்தது. அத்துடன் கணக்காய்வாளர், பாலர்பாடசாலை ஆசிரியர் குழாம், முகாமையாளர் சங்க ஊழியர்கள், சிற்றூழியர், உணவக உரிமையாளர், பாதுகாப்பு உத்தியோகஸ்தர் மற்றும் மாலைக்கடை உரிமையாளர் ஆகியோரின் ஒத்துழைப்பும் கிடைத்தது.

நாம் சங்கத்தின் தூர நோக்கு மகுட வாசகம், குறிக்கோளை மனதில் கொண்டு சங்க யாப்பு விதிகளுக்கு அமைவாகவும் உங்கள் அனைவரது ஒத்துழைப்புடனும் இவ் வருடத்தை அபிவிருத்திப் பாதையில் வழி நடாத்த உங்களின் மேலான ஆதரவை வேண்டி நிற்கிறேன்.

நன்றி

இங்ஙனம்.
மருத்துவர் ப.சத்தியநாதன்
கௌரவ தலைவர்.

உ
சிவமயம்

# கௌரவ செயலாளர் அறிக்கை

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

மதிப்புமிகு பொதுச்சபை உறுப்பினர்களே, ஆட்சிமன்ற உறுப்பினர்களே, அனைவருக்கும் அன்பு வணக்கம்.

11.04.2021ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபை கூட்டத்தில் என்னை சங்கத்தின் செயலாளராக தெரிவு செய்தமைக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கௌரவமான ஆட்சிமன்ற உறுப்பினர்கள், தலைவரின் மற்றும் பொருளாளர், உப தலைவர் உப செயலாளர் ஆகியோரின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புடன் சங்கத்தின் நடைமுறை செயல்பாடுகளையும் மற்றும் பொது மக்களது தேவை அறிந்து உயர்வான சேவைகளை நாம் சங்கத்தின் பணிகள் ஊடாக செயல்படுத்தி வருகிறோம்.

மேலும் எமது சங்கத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் தோழமையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் அனைத்து ஆட்சிமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் திருப்தியளிக்கின்றது.

எமது சங்கம் COVID 19 காலங்களில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களுக்கு முகம் கொடுத்து நிதிநிலைமையில் பாரிய நெருக்கடியைச் சந்தித்தோம். ஊழியர்களின் வருகை இல்லாமல் இரவு நேரக் காவலாளியை தற்காலிகமாக நியமித்து சங்கத்தை செயல்படுத்தினோம். (பயணத்தடை வேளையில்) நிலைமை சீரடைந்ததும் முகாமையாளர் ஊடாக பகல் நேரத்தைக் சங்க செயற்பாட்டை முன்னெடுத்து சென்றோம். இக்காலங்களில் எமக்கு உதவிகள் வழங்கிய சங்கத்தின் சைவ உணவக நடத்துனர் மற்றும் ஊழியர்களுக்கு நன்றிகள்.

எமது தங்குமிடம் மூலம் பாடசாலை மூலம் மேற்கூறிய காலங்களில் வருமானம் முற்றுமுழுதாக முடக்கப்பட்ட சமயம் ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கொடுப்பனவுகளை

கொடுப்பதற்கு பாரிய சிரமத்திற்கு உள்ளானோம். பின்னர் கலந்தாலோசனைகள் மூலம் பொருளாதார நெருக்கடிக்கு முடிவு எட்டப்பட்டது. உதாரணம் கடன் உதவிகள் மூலம் சிலவற்றை சீராக்கி இருந்தோம். கிட்டத்தட்ட 3, 4 மாதங்களுக்கு மேலாக ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் ரூபா 5000.00 இடர்கால கொடுப்பனவுகளை வழங்கியிருந்தோம்.

சங்கத்தின் செலவீனங்களை சீராக்குவதற்கு தலைவர் ப.சத்தியநாதன் அவர்கள், முன்னாள் தர்மகர்த்தசபை உறுப்பினர் ந.பாலச்சந்திரன் அவர்கள், உபதலைவர் தே.அமலன் ஆகியோர் கடன் அடிப்படையில் வழங்கிய நிதியுதவி கைகொடுத்தது. பின்னர் அவர்களுக்கு நாம் வழங்கியிருந்தோம்.

கொரோனா காலங்களில் சங்கத்தின் மண்டபத்தை உலருணவுப் பொதி செய்வதற்காக வ/தமிழ் மத்திய மகாவித்தியாலய புலம்பெயர் பழைய மாணவர் ஒன்றியத்திற்கு வழங்கியிருந்தோம். இச்செயற்பாடுகளுக்கு தே.அமலன், பொருளாளர் யசோதரன், சங்க உறுப்பினர்கள், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் உதவிகள் புரிந்தனர்.

உலருணவுப் பொதிகள் பொதிசெய்து வழங்கியிருந்தோம். வறிய குடும்பங்களுக்கும், அறநெறி ஆசிரியர்கள் மற்றும் எமது ஆசிரியர்களுக்கும் ஏனைய கொவிட் - 19 தொற்றால் பாதிப்படைந்த மக்களுக்கும் உலர் உணவு பொதிகள் வழங்கியிருந்தோம்.

முன்னாள் தலைவர்.நா.தர்மராசா அகளங்கன் அவர்கள் அவுஸ்ரேலியாவில் இருந்து வழங்கிய பண உதவி மூலமும் உலர்உணவு பொதிகளை எமது சங்கத்தின் ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அவர்களுடன் தொடர்புகொண்டு வழங்கியிருந்தோம்.

- சங்கத்தின் வெள்ளிக்கிழமை பூசைகள் வழமைபோல் நடராஜபெருமானுக்கு நடைபெற்று வருகின்றது. விசேட தினங்களில் பூஜைகளும் வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றது.
- சங்கத்தில் திருவாசக முற்றோதல் கடந்த வருடம் இடம்பெற்றது. பங்களிப்பு வழங்கியவர்களுக்கு நன்றிகள்.

- சரஸ்வதி பூசை (நவராத்திரி விழா) வழமைபோல இவ்வருடமும் சிறப்பாகவும் நிறைவாகவும் நடைபெற்றது.
- சங்க வளாகத்தில் கார்த்திகை தீபம் சிறப்பாக ஏற்றி வைக்கப்பட்டது.
- தைப்பொங்கல் விழா அன்று காலை சங்கத்தின் முற்றத்தில் பொங்கலிட்டு சூரியபகவானுக்கு படையல் செய்யப்பட்டு வழிபாடு இடம்பெற்றது.
- இரண்டாம் நாள் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் பொங்கல் வழிபாடு என்பன இடம்பெற்றது.
- கொவிட் காரணமாக கலாசார நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவில்லை. சாதாரண நிகழ்வுகள் இடம்பெற்றன.
- பல்வேறு தடைகள் இடர்பாடுகளுக்கு மத்தியிலும் எமது சங்கத்தின் செயற்பாடுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மாதாந்த ஆட்சிமன்ற கூட்டம் தொடராக நடைபெற்று ஆசிரியர்களுடனான சந்திப்புக்கள் மற்றும் பெற்றோருடனான சந்திப்புகள் இடம்பெற்றது.
- கொவிட் 19 தொற்று நிலவிய காலத்தில் மட்டும் இரண்டு ஆட்சிமன்ற கூட்டங்கள் நடைபெறவில்லை. (யூன் செப்ரெம்பர்)
- மறைந்த நீண்டகால ஆயுட்கால பொதுச்சபை உறுப்பினர்கள் தர்மகர்த்தாசபை உறுப்பினர் ஆகியோர் ஆட்சிமன்ற கூட்டங்களில் மௌன அஞ்சலியுடன் நினைவு கூறப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
- நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆசி வேண்டிய பிரார்த்தனைகள் சங்க நடராசார் மண்டபத்தில் வழிபாட்டுடன் இடம் பெற்றது.
- சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் நிகழ்வு மற்றும் சுவாமி இலங்கை விஜயத்தின் 125ஆம் வருடத்தை முன்னிட்டு கொழும்பு இராமகிருஷ்ணன் மிசன் மற்றும் சுவாமிகளும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த சிறப்பான நிகழ்வு கடந்த 22.01.2022 அன்று நடராஜர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பெறுமதி மிகுந்த புத்தகங்கள்

அப்பியாசக் கொப்பிகள் சிறந்த நூல்கள் என்பன வழங்கப்பட்டது.

- எமது சங்கம் இந்து சமய வளர்ச்சிக்கும் அதன் செயல்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து வருவதுடன் ஆக்கபூர்வமான உதவிகளையும் வழங்கி வருகின்றது.
- சங்கத்தின் புதிய முகாமயாளர் நியமித்ததன் பின்னர் தனது கடமைகளை நிறைவேற்றி வருகின்றார்.
- எமது தங்குமிடம் மூலமும், திருமண் மண்டபம் மூலமும், பாலர்பாடசாலை மூலமும் தற்போது வருமானம் ஓரளவு திருப்திகரமாகவுள்ளது.
- புதிய மாணவர்களில் கணிசமானவர்கள் பாடசாலையில் இணைந்துள்ளனர்.
- எமது சங்கத்தின் செயற்பாடுகளுக்கு முழுமையாக பங்களிப்பும் ஒத்துழைப்பும் வழங்கி வரும் ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் அவ்வப்போது தேவைகளின் போது உதவிவழங்கும் நல் உள்ளங்கள், ஊழியர்கள், முகாமையாளர், காவல்கடமை புரிவோர், அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

சங்கத்தின் செயற்பாடுகளுக்கு அனைவரும் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

என்றும் அன்புடன்,
சிவராசா நாகராசா
கௌரவ செயலாளர்,
சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்,
வவுனியா.

உ
சிவமயம்

# கௌரவ பொருளாளர் அறிக்கை

எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பொதுச் சபை உறுப்பினர்களுக்கு, வவுனியா மண்ணில் சமய, சமூக பணிகளை சிறந்த முறையில் வழங்கி வருகின்ற சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் பொருளாளராக சேவையாற்றுவதற்கு மீண்டும் எனக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கிய இறைவனுக்கும் உங்களுக்கும் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு 2021 ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கையினை சமர்ப்பிக்கிறேன்.

இவ் ஆண்டிலும் கொவிட் பெரும் தொற்று காரணமாக எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பாரிய பின்னடைவுகளை நாம் சந்தித்திருந்தோம். திருமணங்களை நடாத்துவதில் கட்டுப்பாடு, பயணிகள் தங்குவதில் கட்டுப்பாடு மற்றும் பாலர் பாடசாலையை 2 ஆம் தவணைக்காக நடாத்த முடியாது போனது. முற்பதிவு செய்த திருமணங்களுக்கான கட்டணங்களை மீளச்செலுத்த வேண்டி இருந்தது, வாடகைக்கு வழங்கப்பட் கட்டிடங்களுக்கு இரண்டு மாத வாடகைகள் தள்ளுபடி செய்யப்பட்டதும் அத்துடன் உணவக மேல்மாடியினை வாடகைக்கு பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து மீளப் பெற்றதன் பின் அதனை வாடகைக்கு கொடுக்க முடியாமல் போனதுடன் உணவக வாடகையினையும் உரியமுறையில் பெறமுடியாத காரணங்களால் வரவுகள் மிகவும் குறைவாகவே கிடைத்ததை காணலாம்.

.

**கடந்த 5 வருடங்களின் வருமான ஒப்பீடு**

| வருமானங்கள் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| 1 தங்குமிடம் | 1,678,955 | 1,772,860 | 2,037,690 | 1,108,400 | 888,650.00 |
| 2 திருமண மண்டபம் | 1,396,000 | 1,044,000 | 673,000 | 452,000 | 427,000.00 |
| 3 உணவு | 402,000 | 433,250 | 482,030 | 226,500 | 122,500.00 |
| 4 கன்ரின் வாடகை | 212,650 | 230,570 | 220,000 | 210,000 | 130,000.00 |
| 5 கன்ரின் மேல்மாடி | 72,000 | 92,000 | 90,000 | 80,000 | 15,000.00 |
| 6 மாலைக் கடை | 0 | 0 | 0 | 10,000.00 | 50,000.00 |
| 7 சிறுவர் பாடசாலை | 2,773,400 | 2,863,650 | 3,132,650 | 1,697,970 | 1,745,830.00 |

கடந்த ஐந்து வருடங்களை நோக்கும் போது வருமானங்களில் ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டாலும் இறுதி இரண்டு வருடங்களும் வருமானம் குறைந்து செல்வதை அவதானிக்கலாம் இதற்கு கொவிட் தொற்றுக் காரணமாக நாட்டில் ஏற்பட்ட முடக்கநிலையாகும். இது எமக்கு மட்டுமில்லாது நாட்டிற்கும் ஏன் உலகிற்கும் பொருந்தும். கொரோன தொற்றின் காரணமாக ஏற்பட்ட வருமான இழப்பினால் எமது பல்வேறு பொதுச் சேவைகளை மட்டுப்படுத்த அல்லது நிறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டபோதும் பல்வேறு உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் உதவியுடன் சங்கத்தின் சேவைகள் தொடர்ந்தது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள நலன் விரும்பிகள் சங்கத்தின் மீது கொண்ட நம்பிக்கையும், சங்கத்தின் வெளிப்படை தன்மையான செயற்பாடுகளாலும் கொவிட் தொற்றால் வாழ்வதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு வழங்கவென ரூபா 676,200.00 நன்கொடை கிடைத்தது. இதன் மூலம் பாதிக்கப்பட்ட 305 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி உதவமுடிந்தது. நிதியுதவி வழங்கியவர் களின் விபரம் பிற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

**2021 இன் வருமானங்களும் வீதமும்**

| | வருமானங்கள் | 2021 | வீதம் |
|---|---|---|---|
| 1 | தங்குமிடம் வருமானம் | 888,650.00 | 21% |
| 2 | திருமண மண்டபம் | 427,000.00 | 10% |
| 3 | கன்ரின் வாடகை | 130,000.00 | 3% |
| 4 | கன்ரின் மேல்மாடி வாடகை | 15,000.00 | 0% |
| 5 | உணவு மூலம் தேறிய வருமதி | 122,500.00 | 3% |
| 6 | ஏனைய வருமானங்கள் | 159,320.00 | 4% |
| 7 | சிறுவர் பாடசாலை | 1,745,830.00 | 42% |
| 8 | மாலைக்கடை | 50,000.00 | 1% |
| 9 | உலருணவுக்கான நன்கொடை | 676,200.00 | 16% |
| | | 4,214,500.00 | |

வருமானங்கள் குறைவடைந்த நிலையில் செலவீனங்களை கட்டுப்படுத்துவது என்பது சங்கத்திற்கு மிகப்பெரிய சவாலாகும். 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் சங்க செயற்பாடுகள் மற்றும் வருமானங்கள் பின்னடைவை சந்தித்ததினால் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதிலும் அலுவலக ஊழியர்களின் கொடுப்பனவுகளை வழங்குவதிலும் இடர்பாடுகள் ஏற்பட்டது. இருந்த போதிலும் ஆசிரியைகள் மற்றும் ஊழியர்களின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு வாழ்வாதாரக் கொடுப்பனவுகளையும் உலருணவுப் பொதிகளையும் வழங்கியிருந்தோம். வருமானங்கள் சீரான பின்னர் அவர்களுக்கான கொடுப்பனவுகளையும் முன்புபோல் வழங்கியிருந்தோம்.

**2021 இன் செலவீனங்களும் வீதமும்**

| | செலவுகள் | தொகை | வீதம் |
|---|---|---|---|
| 01. | நிர்வாக ஊழியர் சம்பளங்கள் | 873,063.60 | 20 % |
| 02 | சமய நிகழ்ச்சி செலவுகள் | 114,736.00 | 03 % |
| 03 | சிறுவர் பாடசாலை செலவு | 1,448,153.84 | 34 % |
| 04 | திருமண மண்டப செலவு | 399,229.00 | 09 % |
| 05 | நன்கொடைகள். | 72,900.00 | 02 % |
| 06 | அலுவலக பொருட்கள் | 25,539.00 | 01 % |
| 07 | கூட்டச்செலவு, தபால் செலவு | 77,378.00 | 02 % |
| 08 | நிர்வாகச் செலவு | 270,757.18 | 06 % |
| 09 | வர்ணப் பூச்சு செலவு | 12,577.00 | 0 % |
| 10 | ஏனைய செலவுகள் | 201,264.00 | 05 % |
| 11 | சொத்துக்கொள்வனவு | 151,055.00 | 04 % |
| 12 | உலருணவுப் பொருட்கள் | 639,613.00 | 14 % |
| 13 | சேமிப்பு வைப்பு | 18,600.00 | 0 % |
| | மொத்தம் | 4,304,865.62 | |

பாலர் பாடசாலையை எடுத்துக்கொண்டால் மார்ச் மாதத்தின் பின்னர் ஒரு தவணை முழுமையாக இயங்கவில்லை, இது எமக்கு பாரிய சவாலாகும். இவ் வருடத்தில் இரண்டு ஆசிரியர்கள் ஓய்வு பெற்றதினாலும், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களை வைத்திருந்ததினாலும் மற்றும் வருட இறுதி தவணையில் தவணைக்கட்டணங்களை உரிய முறையில் பெற்றதினாலும், ரூபா 432,301.16 செலவிலும் கூடிய வரவாக காணப்படுகிறது. சிறுவர் பாடசாலையை நிர்வாக ரீதியாகவும், கற்பித்தல் ரீதியாகவும் மேம்படுத்தும் செயற்றிட்டத்தினை இவ்வருடமும் நடைமுறைப்படுத்தினோம். ஆசிரியர்களுடனான கூட்டங்களை மாதாந்தம் நடாத்தியதன் மூலம் பாடசாலை நடைமுறைகளை மீளாய்வு செய்ததுடன், இலகுவாக எமது இலக்குகளை அடையக் கூடியதாக இருந்தது.

2021 ஆம் ஆண்டும் சங்கத்திற்கு மிகவும் சவாலான ஆண்டாக இருந்தது. வருமானம் குறைவாக பெறப்பட்டதுடன் செலவுகளை கட்டுப்படுத்தியும், மாதாந்த கூட்டங்களை சுகாதார விதிமுறைகளைப் பேணி ஒழுங்காக நாடாத்தியும் சங்கத்தின் சகல செயற்பாடுகளையும் ஆட்சி மன்றத்தில் பரிசீலித்து, மன்ற அனுமதியுடன் வழி நடாத்தியிருந்தோம். சென்ற வருடம் திரு.க.ந. பாலச்சந்திரன் அவர்களிடம் பெற்ற கடனையும் இவ்வருடத்தில் செலுத்த கூடியதாக இருந்தது. இவ்வருடம் நிரந்தர வைப்புக்கு எதிராக பெற்ற கடனுடனும், சிலரிடம் மேலதிக கடன்களை பெற்றும் பயணித்து வருட இறுதியில் ஆரோக்கியமான நிலையினை நோக்கி பயணிக்கக் கூடியவாறு இருந்தது.

இக்காலப் பகுதியில் நாம் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியும் இருந்தது. பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் சிலர் நடந்து கொண்ட முறை தொடர்பாக சமூக ஊடகங்களில் வெளியான செய்தி எமக்கு பாதிப்பை ஏற்படுத்த கூடியதாகவிருந்து. அத்துடன் புதிய கூற்று நிருபத்திற்கமைய வங்கி கணக்கை மாற்றுவதிலும் சிரமம் ஏற்பட்டது. சங்கத்தின் நலனை கருத்தில் கொண்டு சில பிரச்சினைகளை சிரமத்தின் மத்தியில் கையாண்டு நாம் பயணிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் 2021 ஆம் நடைபெற்ற புதிய நிர்வாகத் தெரிவின் போது வேலைப்பளு கொண்ட ஒருவர் செயலாளராக தெரிவானது சங்க செயற்பாடுகளுக்கு மேலும் ஒரு சவாலாக இருந்தது. இதனால் சங்கத்தின் நலனை கருத்தில் கொண்டு அவரது கடமைகளை மேலதிகமாக செய்ய வேண்டிய தேவையும் எனக்கு ஏற்பட்டது.

உறுப்பினர்கள் தெரிவின் போது பொதுச்சபையானது பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் எனவும் இவ்விடத்தில் தயவாக கேட்டுக்கொள்கிறேன்.

பல சவால்களை சந்தித்த போதும் சங்கம் இவ் நிதியாண்டிலும் தனது நிறைவான சேவையினை இம் மண்ணிற்கு வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கத்தினை செயற்பாடுகளுக்கு தலைவராக இருந்து வழி நடாத்திய தலைவர் மருத்துவர் ப. சத்தியநாதன் அவர்களுக்கும், சங்கச் செயற்பாடுகளுக்கு ஆதரவு தந்து ஆலோசனைகளையும் வழங்கிய செயலாளர் மற்றும் ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுச்சபை உறுப்பினர்களுக்கும், இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, எமக்கு தேவையான நிதி, பொருள் மற்றும் சரீர உதவிகளை வழங்கிய நல்லுள்ளங் களுக்கும், தேவையான போது கடனுதவிகள் செய்த உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இச் சங்க செயற்பாட்டில் இணைந்து சேவையாற்றுவதற்கு எனக்குமொரு சந்தர்ப்பத்தை வழங்கிய உங்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் எமது வழிகாட்டல்களுக்கு அமைவாக பணியாற்றும் சிறுவர் பாடசாலை அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கும் அலுவலகத்தில் பணியாற்றும் முகாமையாளர் மற்றும் ஊழியர்களுக்கும், திருமண மண்டபத்தினை பராமரித்த திரு.க.முனீஸ்காந் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இந்த கணக்கறிக்கையினை குறுகிய காலத்தில் ஆய்வு செய்து அறிக்கை தந்த கணக்காய்வாளர் திரு.சு.ஜெயச்சந்திரன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இச் சங்கமானது எதிர்காலத்திலும் இன்னும் பல சேவைகளையும் இம் மண்ணுக்கு வழங்க வேண்டுமென்று நடராஜப் பெருமானை வேண்டி நிறைவு செய்கிறேன்.

நன்றி.

திரு.த.யசோதரன்
கௌரவ பொருளாளர்

உ
சிவமயம்

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
# வருடாந்த கணக்காய்வு அறிக்கை – 2021

சங்கத்தின் பெயர் :- வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
பதிவு இல :- HA/4/V/5
கணக்காய்வுக் காலம் :- 01.01.2021 - 31.12.2021

அங்கத்தவர் விபரம்:-

| | | |
|---|---|---|
| ஆயுள் காலம் | - | 146 |
| சாதாரண அங்கத்துவம் | - | 51 |
| மொத்தம் | - | 197 |

| | | |
|---|---|---|
| நடைபெற்ற பொதுக்கூட்டம் | - | 01 |
| ஆட்சிமன்றக் கூட்டம் | - | 06 |
| விசேட ஆட்சிமன்றக்கூட்டம் | - | 01 |

கணக்காய்வாளர் - திரு.சு.ஜெயச்சந்திரன்
(முகாமையாளர், ஆசிரியர் வாண்மைவிருத்தி நிலையம், புளியங்குளம்)

மேற்படி நான் வவுனியா சுத்தாணந்த இந்து இளைஞர் சங்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்குரிய பற்றுச் சீட்டுகள், உறுதிச் சிட்டைகள், மாதாந்த கணக்ககள், இறுதிக் கணக்குகள், கூட்ட அறிக்கைகள், ஆவணங்கள், பொருட்கணக்கெடுப்பு புத்தகம் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் சரி பிழை பார்த்தும் கணக்காய்வு செய்துள்ளேன். எனக்கு வழங்கப்பட்ட புத்தகங்கள் ஆவணங்களின் படியும் சங்கத்தின் பொருளாளர், செயலாளர் ஆகியவர்களினால் வழங்கப்பட்ட தகவல்களின் படியும் இங்கே பிரதி கொடுக்கப்பட்டுள்ள சங்கத்தின் இறுதிக் கணக்குகளும் ஐந்தொகையும் சங்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான நிதி நிலைமைக் கூற்று வெளிக்கொணரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என உறுதியளிக்கின்றேன்.

| **தேறியவருமானம்** | **2019** | **2020** | **2021** |
|---|---|---|---|
| திருமண மண்டபம் | 432,065.65 | 289,403.00 | 150,271.00 |
| சிறுவர் பாடசாலை | 197,560.93 | (560,943.00) | 432,301.16 |
| வருமானச் செலவு க/கு | 123,289.82 | (1,477,969.00) | (443,024.34) |

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிட்டு வருமானங்களை பார்க்கும்போது திருமண மண்டப வாடகை மற்றும் தங்குமிடம் ஆகியவற்றின் வருமானங்கள் வீழ்ச்சிப் போக்கை காட்டுகின்றன. உலகப் பேரிடர் இதற்கு பிரதான காரணமாகும் என்பதை உணர்கிறேன். சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்கியமையால் (சம்பளக் கொடுப்பனவு குறைவடைந்துள்ளமையால்) நட்டத்திலிருந்து தப்பிப் பிழைத்துள்ளது.

| செலவுகள் | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|
| நிர்வாகச் செலவு | 540,615.00 | 349,028.00 | 270,757.18 |
| வர்ணப் பூச்சு | | 88,725.00 | 12,577.00 |
| ஏனைய செலவுகள் | 812,326.00 | 365,902.00 | 201,264.00 |
| சம்பளங்கள் | 2,293,362.00 | 2,393,348.00 | 1,904,301.64 |
| நன்கொடைகள் | 208,060.00 | 362,315.00 | 72,900.00 |

செலவீனங்களை பொறுத்தவரையில் நன்கொடைகள் அதிகரித்துள்ளன உலக பேரிடர் கால உலருணவு கொடுப்பனவு முழுமையாக நன்கொடை மூலமே வழங்கப்பட்டுள்ளது. வருமதிகள் குறைவடைந்த போதும் நன்கொடைகள் பெறப்பட்டு இவ்வாறான செயற்றிட்டங்களை மேற்கொண்டமையானது நிறுவனத்தின் சமூக வேலைத்திட்டம் என்ற வகையில் பாராட்டுதலுக்குரியது என அபிப்பிராயப்படுகிறேன். கடந்த காலத்தில் தனி நபர்களிடம் பெறப்பட்ட கடன்கள் மீளச் செலுத்தப்பட்டுள்ளன இது நிறுவனத்தின் நல்லம்சம் என அபிப்பிராயப்படுகிறேன். கன்ரீன் வாடகை மாதாந்தம் செலுத்தப்பட வேண்டும். கட்டிடங்களுக்கான வாடகை எதுவாயினும் கடந்த மாதத்திற்கானது அடுத்த மாதத்தின் 05 ஆம் திகதிக்கு முன் பெறப்பட வேண்டும்.

ஆவணங்கள் மற்றும் பற்றுச்சீட்டுகள் தொடர்பில் பின்வரும் அவதானங்களை குறிப்பிட விரும்புகிறேன்.

1. பற்றுசீட்டுகளின் பதிவுகள் சில (காபண் பிரதி) அழிவடைந்துள்ளன. இவை பெறப்பட்ட தினத்தில் நிழற்பிரதி செய்யப்படவேண்டும்.
2. பதிவேடுகளில் வெட்டுதல் மற்றும் கீறுதல் தவிர்க்கப்படவேண்டும்
3. கூட்டறிக்கையில் பல பக்கங்கள் கிழிக்கப்பட்டும் ஒட்டப்பட்டும், வெட்டப்பட்டும் உள்ளது இவை தவிர்க்கப்படவேண்டும். கூட்டத் தீர்மானங்கள் சரியான முறையில் குறிப்பிடப்பட வேண்டும்.
4. வருடாந்த பொருட் கணக்கெடுப்பு மூவர் கொண்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டு பதிவுகள் யாவும் உறுதிப்படுத்த வேண்டும்.
5. பொருட் பதிவேட்டு புத்தகம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

01.01.2021 முதல் 31.12.2021 வரையான காலப்பகுதியில் சங்கத்தின் செயற்பாடுகள் ஆரோக்கியமான சூழ்நிலையில் மேற் கொள்ளப்பட்டுள்ளது என அபிப்பிராயப்படுகிறேன்.

நன்றி.

கௌரவ கணக்காய்வாளர்
திரு.சு.ஜெயச்சந்திரன்

## உதவி வழங்கிய நல்லுள்ளங்கள்

| | | |
|---|---|---|
| **உலருணவிற்கான நன்கொடைகள்** | | |
| திரு.மா.தரணீதரன் | 50,000.00 | |
| திரு.கா.திருக்குமார் | 35,000.00 | |
| திரு.தே.அமலன் | 12,000.00 | |
| திரு.நா.தர்மராஜா (அகளங்கன்) | 50,000.00 | |
| திருமதி.வாசுகி தேவி மகாதேவன் | 30,000.00 | |
| திரு.ப.சத்தியநாதன் | 35,000.00 | |
| காவ்யா யாதவன், இலக்கியன் யாதவன் | 250,000.00 | |
| கிஷான் இராஜசேகரம், சுகன்ஜா விஸ்புராஜ், சுலக்ஷன் விஸ்ணுராஜ் | 119,700.00 | |
| தீப்யா சண்முகலிங்கம் | 94,500.00 | |
| | | 676,200.00 |
| **சரஸ்வதி பூஜைக்கான உபயம்** | | |
| திரு.தே.அமலன் | 6,000.00 | |
| திரு.க.முனீஸ்காந் | 4,000.00 | |
| திருமதி.வீ.சூரியாழினி | 4,000.00 | |
| திரு.த.பிரபாகரன் | 4,000.00 | |
| திரு.கனகேஸ்வரன் | 2,000.00 | |
| திரு.க.மு.சுதர்சன் | 6,000.00 | |
| சிவசிறி.க.கணேசதாச குருக்கள் | 4,000.00 | |
| | | 30,000.00 |
| **அன்னதானம் வழங்கல்** | | |
| திரு.க.தர்மதேவன் | 13,500.00 | |
| திரு.தே.அமலன் | 6,750.00 | |
| | | 20,250.00 |
| **பூஜை நன்கொடை** | | |
| திரு.வைத்திலிங்கம் | 2,000.00 | |
| திரு.ப.சிவகெங்காதரன் | 7,500.00 | |
| சிவபீடம் | 3,500.00 | |
| | | 13,000.00 |
| **மன்னார் நரசிம்மர் கோவிலுக்கு வழங்க** | | |
| திரு.தே.அமலன் | | 5,000.00 |
| மக்கனரிவ் போட் கொள்வனவிற்கு திரு.க.சுவர்ணராஜா | | 5,000.00 |
| ஏனைய நன்கொடை | | 1,500.00 |

**பொருள் நன்கொடை**

- புறஜெக்ரர் திரை - திரு.சு.ஜெயசீலன்

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா
# 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரை காசுக்கணக்கு

| வரவு விபரம் | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| 01.01.2021இல் காசுபுத்தக வங்கிமீதி | (353,785.70) | (353,785.70) |
| 01.01.2021இல் காசுமீதி | 5,393.00 | 5,393.00 |
| திருமணம், பூப்புனித நீராட்டு விழா | 310,000.00 | |
| மேளம், ஐயர், வாழை | 36,000.00 | |
| புறஜெக்ரர் வாடகை | 5,000.00 | |
| ஏனைய கூட்டங்கள், நிகழ்வுகள் | 38,000.00 | |
| உணவு வழங்கல் | 160,500.00 | |
| | | 549,500.00 |
| தங்குமிட வாடகை | 888,650.00 | |
| வாகன தரிப்பிட வாடகை | 5,550.00 | |
| ஆட்டோ தரிப்பு வாடகை | 10,000.00 | |
| கன்ரின் வாடகை | 130,000.00 | |
| கலைத்தொடர்பக வாடகை | 15,000.00 | |
| நடன வகுப்பு வாடகை | 2,100.00 | |
| உடற்றிறன் வகுப்பு வாடகை | 500.00 | |
| மாலைக் கடை வாடகை | 50,000.00 | |
| | | 1,101,800.00 |
| கன்ரின் வாடகை பாக்கி 2020 | 10,000.00 | |
| பதிப்பக பழைய வாடகை-2020 | 15,000.00 | |
| | | 25,000.00 |
| பாடசாலைக் தவணைக் கட்டணம் | 1,466,000.00 | |
| T Shirt விற்பனை | 116,800.00 | |
| அப்பியாசப் புத்தகம் | 81,900.00 | |
| பதிவுக் கட்டணம் | 45,000.00 | |
| புத்தகங்கள் விற்பனை | 27,850.00 | |
| செயலட்டை | 1,100.00 | |
| கற்றல் பொருளுக்கான நன்கொடை | 5,000.00 | |
| பாடசாலைப் படிவம் | 2,180.00 | |
| | | 1,745,830.00 |

## சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா
## 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரை காசுக்கணக்கு

| செலவு விபரம் | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| **01. சம்பளங்கள்** | | |
| அலுவலக ஊழியர் சம்பளம் | 547,177.20 | |
| EPF & ETF | 80,886.40 | |
| பாதுகாப்புச் சேவை | 245,000.00 | |
| | | 873,063.60 |
| **02. சமய நிகழ்ச்சிச் செலவுகள்** | | |
| வெள்ளிப் பூசை | 49,899.00 | |
| பிரதோச பூஜை | 1,960.00 | |
| பொங்கல் | 6,833.00 | |
| வருடப்பிறப்பு | 1,102.00 | |
| சரஸ்வதி பூசை | 31,977.00 | |
| சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை | 390.00 | |
| சுவாமி படங்கள், பட்டு கொள்வனவு | 2,300.00 | |
| தேங்காய் எண்ணெய் | 20,275.00 | |
| | | 114,736.00 |
| **03. சிறுவர் பாடசாலை செலவு** | | |
| ஆசிரியர் சம்பளம் | 586,358.27 | |
| கொரோணா கால உதவு தொகை | 240,000.00 | |
| சுகாதார ஊழியர் சம்பளம் | 83,300.00 | |
| EPF & ETF | 121,579.77 | |
| மின்சாரக் கட்டணம் | 8,117.40 | |
| தொலைபேசிக் கட்டணம் | 1,716.40 | |
| பொங்கல் செலவு | 4,985.00 | |
| பாடசாலைத் துப்பரவு | 1,300.00 | |
| ஆசிரியர், பெற்றோர் கூட்டம் | 4,040.00 | |
| சீருடை கொள்வனவு | 237,500.00 | |
| புத்தகங்கள் கொள்வனவு | 110,618.00 | |
| கைகழுவும் பேசின் பொருத்தல் | 5,800.00 | |
| அதிபர் பிரியாவிடை | 12,540.00 | |
| செயலட்டை, விண்ணப்பப்படிவம் | 2,700.00 | |
| பராமரிப்பு பொருட்கள் | 18,019.00 | |
| மின், நீர்க் குழாய் திருத்தம் | 9,580.00 | |
| | | 1,448,153.84 |

| வரவு விபரம் | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| சரஸ்வதி பூஜை வரவு | 32,820.00 | |
| வெள்ளிப் பூஜை நன்கொடை | 2,000.00 | |
| திங்கள் பூஜை நன்கொடை | 11,000.00 | |
| அங்கத்துவச் சந்தா | 18,600.00 | |
| உலருணவு நன்கொடை | 676,200.00 | |
| அன்னதான நன்கொடை | 20,250.00 | |
| நன்கொடை வரவு | 6,500.00 | |
| | | 767,370.00 |
| பழைய பொருட்கள் விற்பனை | 17,130.00 | |
| தேங்காய், கொப்பரா விற்பனை | 3,380.00 | |
| முறையற்ற மின் பாவனை வரவு (கன்ரீன்) | 20,000.00 | |
| கன்ரீன் மேல்மாடி மின் கட்டண வரவு | 4,850.00 | |
| | | 45,360.00 |
| நிரந்தர வைப்பு மீளப் பெறல் | 1,075,421.07 | |
| பெட்டி காசு மீள் வைப்பு | 10,000.00 | |
| | | 1,085,421.07 |
| மீளளிக்க வேண்டிய முற்பணம் | | |
| 1. கன்ரீன் மேல்மாடி | 100,000.00 | |
| 2. ப.சத்தியநாதன் | 100,000.00 | |
| 3. தே.அமலன் | 100,000.00 | |
| | | 300,000.00 |

| செலவு | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| **04. திருமண மண்டப செலவு** | | |
| மின்சாரக் கட்டணம் | 66,014.00 | |
| மேளம், ஐயர், வாழை | 36,000.00 | |
| உணவு | 38,000.00 | |
| புறஜெக்ரர் வாடகை | 3,000.00 | |
| நீர்க்குழாய் / மின் பொருள் திருத்தம் | 59,315.00 | |
| கதிரை உறை சலவை | 21,235.00 | |
| கும்பச் செலவு | 1,365.00 | |
| பராமரிப்பு | 4,000.00 | |
| வர்ணப் பூச்சு மீதி கொடுப்பனவு | 75,000.00 | |
| கண்ணாடி | 1,000.00 | |
| கதிரையுறை திருத்தம் | 1,250.00 | |
| பூட்டுக்கள் பழுது பார்த்தல் | 3,050.00 | |
| பதிவுக் கட்டணம் மீள் செலுத்தல் | 90,000.00 | |
| | | 399,229.00 |
| **05. நன்கொடைகள்** | | |
| பரிசளிப்பு விழா யேசுபுரம் | | |
| வீர துர்க்கை அம்மன் | 3,000.00 | |
| சிற்றூழியரின் மரண வீடு | 5,000.00 | |
| சிறுவர் தினத்திற்கான நன்கொடை | 10,000.00 | |
| முன்பள்ளி, அறநெறி ஆசிரியர்கள் | 39,000.00 | |
| அறநெறி ஆசிரியர் கூட்டம் | 4,950.00 | |
| இந்து அன்பகத்திற்கு | 1,550.00 | |
| மன்னார் ஆஞ்சநேயர் கோவில் | 5,000.00 | |
| மருத்துவ முகாமிற்கான தேனீர் | 3,900.00 | |
| ஜேசுபுரம் கோவில் நன்கொடை | 500.00 | |
| | | 72,900.00 |
| **06. அலுவலக பொருட்கள் கொள்வனவு** | | |
| முத்திரை | 1,035.00 | |
| மேசைத்துணி | 670.00 | |
| போட்டோ கொப்பி, தபால் | 2,264.00 | |
| தினசரி பத்திரிகை | 2,910.00 | |
| பிறின்டர் பேப்பர் | 2,585.00 | |
| ரோணர் கொள்வனவு | 5,750.00 | |
| அடையாள அட்டை | 450.00 | |

| வரவு விபரம் | தொகை | மொ.தொகை |
| --- | --- | --- |
| | | |

| செலவு | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| பெயர் பலகை (தலைவர் விவரம்) | 2,900.00 | |
| கடித தலைப்பு, கடித உறை பிறிண்ட் | 4,110.00 | |
| யாப்பு புத்தகம் | 1,000.00 | |
| கொப்பி, பேனை, பைல் | 1,865.00 | |
| | | 25,539.00 |
| **07. கூட்ட, தபால் செலவு** | | |
| ஆட்சிமன்றம் | 5,685.00 | |
| 2020 கணக்கறிக்கை புத்தகம் | 23,425.00 | |
| பொதுக் கூட்ட தபால் செலவு - 2021 | 5,033.00 | |
| மதிய உணவு | 33,090.00 | |
| சிற்றூண்டி, | 10,145.00 | |
| | | 77,378.00 |
| **08. நிர்வாகம்** | | |
| தொலைபேசிக் கட்டணம் | 26,222.71 | |
| மின்சாரக் கட்டணம் | 161,511.60 | |
| மின்சாரக்கட்டணம் கன்ரீன் மேல் மாடி | 2,953.20 | |
| தண்ணீர்க் கட்டணம் | 5,493.30 | |
| சோலைவரி, நகரசபை வரி, வியாபாரவரி | 12,656.37 | |
| இணையத்தள சேவர் வாடகை | 6,000.00 | |
| பராமரிப்பு பொருட்கள் | 54,381.00 | |
| தேயிலை, சீனி, தண்ணீர | 989.00 | |
| சலவைக் கூலி | 550.00 | |
| | | 270,757.18 |
| **09. வர்ணப் பூச்சுச் செலவுகள்** | | |
| 16ம் இல அறை | 12,577.00 | |
| | | 12,577.00 |
| **10. ஏனைய செலவுகள்** | | |
| மலசல கூடம் துப்பரவு | 9,800.00 | |
| மரம் தறித்தல் | 7,000.00 | |
| குழாய், மின் இணைப்புத் திருத்தம் | 105,100.00 | |
| உணவு மண்டப கூரைசீற் மாற்றியது | 27,759.00 | |
| கட்டில்கள் திருத்தம் | 8,400.00 | |
| கதவு, பூட்டுகள் கொள்வனவு | 2,090.00 | |
| குப்பை பரல் கொள்வனவு | 3,000.00 | |
| கண்ணீர் அஞ்சலி | 5,600.00 | |

| வரவு விபரம் | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| | | |
| | | 5,271,888.37 |

திரு.சு.ஜெயச்சந்திரன்
கௌரவ கணக்காய்வாளர்

| செலவு | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| தங்குமிட கட்டணம் மீளளித்தல் | 1,200.00 | |
| வளவு துப்பரவு | 10,000.00 | |
| பெட்சிற், தலையணியுறை | 19,725.00 | |
| டிசல், ஒயில் | 1,590.00 | |
| | | 201,264.00 |
| **10. சொத்துக் கொள்வனவு** | | |
| கட்டில் கொள்வனவு | 138,000.00 | |
| காமாட்சி விளக்கு | 7,350.00 | |
| மக்னைற்றிவ் போட் | 5,705.00 | |
| | | 151,055.00 |
| **11. சேமிப்பு வைப்பு** | | |
| HNB இல் சேமிப்பு வைப்பு | 18,600.00 | 18,600.00 |
| **12. உலருணவுப் பொருட்கள் கொள்வனவு** | 639,613.00 | 639,613.00 |
| **13. முற்பணம்** | | |
| பெட்டிக்காசு | 10,000.00 | |
| **முற்பணம் மீளளித்தல்** | | |
| பதிப்பகம் | 100,000.00 | |
| கன்ரீன் மேல்மாடி | 100,000.00 | |
| **கடன் மீளளித்தல்** | | |
| ப.சத்தியநாதன் | 100,000.00 | |
| தே.அமலன் | 100,000.00 | |
| க.ந.பாலச்சந்திரன் | 200,000.00 | |
| | | 610,000.00 |
| **14. வங்கி செலவுகள்** | | |
| மேலதிக பற்றுக்கான கட்டணம் | 26,995.77 | |
| திரும்பிய காசோலைக்கான கட்டணம் | 100.00 | |
| காசோலைக் புத்தகக் கட்டணம் | 3,000.00 | |
| | | 30,095.77 |
| 31.12.2021இல் காசுபுத்தக வங்கிமீதி | | 326,926.98 |
| | | 5,271,888.37 |

திரு.த.யசோதரன்
கௌரவ பொருளாளர்

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா.**
**திருமண மண்டப வருமான செலவு கணக்கு**
**01.01.2021 - 31.12.2021**

| செலவு | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| மின்சாரக் கட்டணம் | 66,014.00 | |
| மேளம், ஐயர், வாழை | 36,000.00 | |
| உணவு | 38,000.00 | |
| புறஜெக்ரர் வாடகை | 3,000.00 | |
| நீர்க்குழாய் / மின்பொருள் திருத்தம் | 59,315.00 | |
| கதிரை உறை சலவை | 21,235.00 | |
| கும்பச்செலவு | 1,365.00 | |
| பராமரிப்புச் செலவு | 4,000.00 | |
| வர்ணப்பூச்சு மீதிக் கொடுப்பனவு | 75,000.00 | |
| கண்ணாடி | 1,000.00 | |
| கதிரையுறை திருத்தம் | 1,250.00 | |
| பூட்டுக்கள் பழுது பார்த்தல் | 3,050.00 | |
| பதிவுக்கட்டணம் மீள் செலுத்தம் | 90,000.00 | |
| | | 399,229.00 |
| செலவிலும் கூடிய வரவு | | 150,271.00 |
| | | 549,500.00 |

திரு.க.ஜெயச்சந்திரன்
கௌரவ கணக்காய்வாளர்

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா.**
**திருமண மண்டப வருமான செலவு கணக்கு**
**01.01.2021 - 31.12.2021**

| வரவு | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| திருமணம் பூப்புனித நீராட்டுவிழா | 310,000.00 | |
| மேளம், ஐயர், வாழை | 36,000.00 | |
| புறஜெக்ரர் வாடகை | 5,000.00 | |
| கூட்டங்கள், நிகழ்வுகள் | 38,000.00 | |
| உணவு வழங்கல் | 160,500.00 | |
| | | 549,500.00 |
| | | 549,500.00 |

திரு.த.யசோதரன்
கௌரவ பொருளாளர்

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா.**
**பாலர் பாடசாலை வருமான செலவு கணக்கு**
**01.01.2021 - 31.12.2021**

| செலவு | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| ஆசிரியர் சம்பளம் | 586,358.27 | |
| கொரோணா கால உதவு தொகை | 240,000.00 | |
| சுகாதார ஊழியர் சம்பளம் | 83,300.00 | |
| EPF & ETF | 121,579.77 | |
| மின்சாரக் கட்டணம் | 8,117.40 | |
| தொலைபேசி கட்டணம் | 1,716.40 | |
| பொங்கல் செலவு | 4,985.00 | |
| பாடசாலை துப்பரவு | 1,300.00 | |
| ஆசிரியர் கூட்டம், பெற்றோர் கூட்டம் | 4,040.00 | |
| புத்தகங்கள் கொள்வனவு | 110,618.00 | |
| கைகழுவும் பேசின் பொருத்தல் | 5,800.00 | |
| அதிபர் பிரியாவிடை | 12,540.00 | |
| செயலட்டை, விண்ணப்பப் படிவம் | 2,700.00 | |
| பராமரிப்பு பொருட்கள் | 18,019.00 | |
| மின், நீர்க்குழாய் திருத்தம் | 9,580.00 | |
| | | 1,210,653.84 |
| செலவிலும் கூடிய வரவு | | 432,301.16 |
| | | 1,642,955.00 |

T Shirt **வருமானச் செலவு க / கு**

| | | |
|---|---|---|
| 01.01.2021இல் இருப்பு | 14,525.00 | |
| கொள்வனவு | 2,37,500.00 | 2,52,025.00 |
| செலவிலும் கூடிய வரவு | | 13,925.00 |
| | | 2,65,950.00 |

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா.**
**பாலர் பாடசாலை வருமான செலவு கணக்கு**
**01.01.2021 - 31.12.2021**

| வரவு | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| பாடசாலை தவணை கட்டணம் | 1,466,000.00 | |
| T Shirt விற்பனை | 13,925.00 | |
| அப்பியாசப் புத்தகம் | 81,900.00 | |
| பதிவுக் கட்டணம் | 45,000.00 | |
| புத்தகங்கள் விற்பனை | 27,850.00 | |
| செயலட்டை | 1,100.00 | |
| கற்றல் பொருளுக்கான நன்கொடை | 5,000.00 | |
| பாடசாலைப் படிவம் | 2,180.00 | |
| | | 1,642,955.00 |
| | | 1,642,955.00 |

T Shirt **வருமானச் செலவு க / கு**

| | | |
|---|---|---|
| T shirt விற்பனை | 1,16,800.00 | |
| 31.12.2021இல் கையிருப்பு | 1,49,150.00 | |
| | | 2,65,950.00 |
| | | 2,65,950.00 |

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா.**
**01.01.2021 ந் திகதியில் இருந்து 31.12.2021ந் திகதி**
**வரையான வருமான செலவு கணக்கு**

| செலவு | | மொ.தொகை |
|---|---|---|
| சம்பளங்கள் | | 873,063.60 |
| சமய நிகழ்ச்சி செலவுகள் | | 114,736.00 |
| நன்கொடைகள். | | 72,900.00 |
| அலுவலக பொருட்கள் கொள்வனவு | | 25,539.00 |
| கூட்டச்செலவு, தபால் செலவு | | 77,378.00 |
| நிர்வாகம் | | 270,757.18 |
| வர்ணப் பூச்சு | | 12,577.00 |
| ஏனைய பல்வேறு செலவுகள் | | 201,264.00 |
| உலருணவுப் பொருட்கள் கொள்வனவு | | 639,613.00 |
| வங்கிச் செலவு | | 30,095.77 |
| **பெறுமானத் தேய்வு கட்டிடம்** | | |
| சென்றவருட மீதி | 12,418,878.75 | |
| பெறுமானத் தேய்வு | 12,418,878.75 X 5% | 620,943.94 |
| **பெறுமானத் தேய்வு தளபாடம்** | | |
| சென்றவருட மீதி | 1,521,355.15 | |
| பெறுமானத் தேய்வு | 1521,355.15 X 10% | 152,135.52 |
| | | 3,091,003.01 |

திரு.சு.ஜெயச்சந்திரன்
கௌரவ கணக்காய்வாளர்

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா.**
**01.01.2021 ந் திகதியில் இருந்து 31.12.2021ந் திகதி**
**வரையான வருமான செலவு கணக்கு**

| வரவு | மொ.தொகை |
|---|---|
| ஏனைய வருமதிகள் (திருமண மண்டபம், பாடசாலை தவிர) | 1,217,160.00 |
| திருமண மண்டப வருமான செலவு கணக்கால் செலவிலும் கூடிய மிகை | 150,271.00 |
| சரஸ்வதி பூசை, வெள்ளிப் பூசை நன்கொடை | 45,820.00 |
| பெற்ற சந்தா | 18,600.00 |
| உலருணவுப் வழங்கலுக்கான நன்கொடை | 676,200.00 |
| ஏனைய நன்கொடைகள் | 26,750.00 |
| கற்றன் நஷனல் வங்கி ஈட்டிய வட்டி | 2,082.90 |
| நிரந்தர வைப்பு ஈட்டிய வட்டி | 78,793.61 |
| பாடசாலை வரு. செலவு கணக்கால் செலவிலும் கூடிய மிகை | 432,301.16 |
| வரவிலும் கூடிய செலவு | 443,024.34 |
| | 3,091,003.00 |

திரு.த.யசோதரன்
கௌரவ பொருளாளர்

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா.**

| செலவு | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| பொது நிதி | 14,238,603.60 | |
| இவ்வருட | (443,024.34) | 13,795,579.26 |
| செல்மதிகள் | | |
| வாடகை வைப்பு 2015 இல் இருந்து | 40,000.00 | |
| கன்ரீன் முற்பணம் | 100,000.00 | |
| வைப்பு | 4,486.00 | |
| மாலைக்கடை முற்பணம் | 50,000.00 | 194,486.00 |
| | | 13,990,065.26 |

திரு.சு.ஜெயச்சந்திரன்
கௌரவ கணக்காய்வாளர்

## 01.01.2021 - 31.12.2021ந் திகதி வரையான ஐந்தொகை

| வரவு | தொகை | மொ.தொகை |
| --- | --- | --- |
| **நிலையானசொத்துக்கள்** | | |
| **01. கட்டிடம்** | | |
| சென்ற வருட மீதி | 12,418,878.75 | |
| இவ்வருடம் (+) | – | |
| பெறுமானத் தேய்வு (-) | 620,943.94 | |
| மீதி | | 11,797,934.81 |
| **02. தளபாடம்** | | |
| சென்ற வருட மீதி | 1,521,355.15 | |
| இவ்வருடம் (+) | 151,055.00 | |
| | 1,672,410.15 | |
| பெறுமானத் தேய்வு (-) | 152,135.52 | |
| மீதி | | 1,520,274.63 |
| பொருள் இருப்பு (T Shirt) | | 149,150.00 |
| HNB சேமிப்பு மீதி 01.01.2021 | 82,595.94 | |
| இவ்வருட வைப்பு | 18,600.00 | |
| 2020ல் சேமிப்பு ஈட்டிய வட்டி | 2,082.90 | |
| | | 103,278.84 |
| **வைப்புக்கள்** | | |
| மின் வைப்பு | 16,500.00 | |
| தண்ணீர் | 1,000.00 | |
| IDD பெற | 5,000.00 | |
| | | 22,500.00 |
| **வருமதிகள்** | | |
| கன்ரீன் வாடகை | | 70,000.00 |
| 31.12.2021ல் காசுப்புத்தக வங்கிமீதி | | 326,926.98 |
| | | 13,990,065.26 |

திரு.த.யசோதரன்
கௌரவ பொருளாளர்

**தீர்மானங்கள்**

1. புதிய மலசலகூடம் அமைத்தல்.
2. பாவனையற்ற மலசல கூடங்களை அகற்றுதல்.
3. பாலர்பாடசாலைக்கான நிரந்தர கட்டிடம் அமைத்தலும் உணவு மண்டபத்தை பாலர் பாடசாலைக்கு மாற்றுதலும்.
4. அலுவகத்திற்கான ஒரு கட்டடம் அமைத்தல்.
5. சமயலறையினை பதுப்பித்தல்
6. திருமண மண்டப மேல்மாடியினை பகுதி பகுதியாக நிறைவு செய்தல்.
7. சைவ உணவகத்தை நவீன முறைக்கு ஏற்ப புதுப்பித்து விஸ்தரித்தல்.
8. மாலைக்கடை விஸ்தரித்தல்

உ

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் - வவுனியா

## ஆட்சி மன்ற உறுப்பினர்கள்

11.04.2021 - முதல்

